தி இந்து
CHENNAI
புதன், ஜனவரி 27, 2016
5



▸▸ வித்யாசாகர் மகளிர் கல்லூரியின் 11-ம் ஆண்டு விளையாட்டு தினத்தின்போது பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவியருடன் கல்லூரி நிர்வாகிகள்.

செங்கல்பட்டு

# வித்யாசாகர் மகளிர் கல்லூரியில் விளையாட்டு தின விழா

■ சென்னை

செங்கல்பட்டில் உள்ள வித்யாசாகர் மகளிர் கல்லூரியில் 11-ம் ஆண்டு விளையாட்டு தின விழா கொண்டாடப்பட்டது.

விளையாட்டு தின விழாவை மாவட்ட விளையாட்டு அதிகாரி ஆர்.ஜெயக்குமாரி தொடங்கி வைத்தார். வித்யாசாகர் கல்வி குழுமத்தின் பொருளாளர் சுரேஷ் கன்காரியா வரவேற்றார்.

தலைவர் ஹஸ்திமல் சுரானா, தாளாளர் விகாஸ் சுரானா, கல்லூரி இயக்குநர் பி.ஜி.ஆச்சாரியா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாணவியரின் கூட்டு உடற்பயிற்சி, தொடர் ஓட்டம், யோகா, தேசிய மாணவர் படை அணிவகுப்பு ஆகியவையும் நடைபெற்றன.

நிறைவு நிகழ்ச்சியில் தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக துணைவேந்தர் ஏ.எம்.மூர்த்தி சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். உடற்கல்வி ஆசிரியை உஷாமேரி ஆண்டறிக்கை வாசித்தார்.

மாணவியரின் ஏரோபிக்ஸ், சிலம்பாட்டம், கராத்தே, பிரமிட் விளையாட்டு நிகழ்வுகள் நடத்தப்பட்டன. பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவியருக்கு சான்றிதழும், கோப்பையும் வழங்கப்பட்டன. கல்லூரி முதல்வர் சி.ஷாலினி குமார் நன்றி கூறினார்.

இந்தநிகழ்ச்சியில் ஏராளமான மாணவிகளும் அவர்களது பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.